**1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கை பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டம்**

**14அ என்னும் பிரிவின் கீழான கட்டளை**

அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படுவதான 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் 14அ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், மேலேயுள்ள சட்டத்தின் 14அ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் விதிக்கப்பட்டு அறவிடப்பட வேண்டிய தீர்வை வீதத்தை இக்கட்டளை மூலம் இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கின்றேன்.

மஹிந்த ராஜபக்ஷ
சனாதிபதி

கொழும்பு,
2010 11.19 ஆந் தேதி.

**அட்டவணை**

| பிணையத்தின் தன்மை | 50 மில்லியன் ரூபா வரையிலான வியாபாரம் | 50 மில்லியன் ரூபாவுக்கு மேலான வியாபாரம் |
|---|---|---|
| நிரற்படுத்தப்பட்ட ஒப்புரவு | 0.072% | 0.045% |
| கூட்டிணைப்புக் கடன் (பகிரங்க நிரற்படுத்தப்பட்ட கம்பெனிகளின் நிரற்படுத்தப்பட்ட கடன் தொகுதிப் பத்திரங்களும் நிரற்படுத்தப்படாத கடன் தொகுதிப் பத்திரங்களும்) | வியாபாரத்தின் மொத்தப் பெறுமதி x 0.02% 3 ஆல் பிரிக்கப்பட்டது | |
| கூறு நம்பிக்கைப் பொறுப்புக்களின் நிரற்படுத்தப்பட்ட கூறுகள் | கொடுக்கல் வாங்கற் பெறுமதியின் 0.02% | |